3. தகவல் கோரல்.

(அ) அரசுக் கவிஞர் கண்ணதாசனுக்கு அமெரிக்காவில் ஆகும் மருத்துவச் செலவு.

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய பொறுப்பும் கடமையுமாகும். நம்முடைய அரசவைக் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் நோய்வாய்ப்பட்டு ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார் என்று செய்திகள் வந்தன. இப்போதும் அந்த ஆபத்தான கட்டம் நீங்கவில்லை என்றுதான் அங்கேயிருந்து தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அரசு இது குறித்து டாக்டர் திருவேங்கடம் அவர்களை அனுப்பி வைத்தது. அவரும் திரும்பி வந்து விட்டார் என்று கேள்விப்படுகிறேன். முழு விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. இருந்தபோதிலும், அரசாங்கம் இதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை போதாது என்றும், ஒவ்வொரு நாளும் அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் அந்த மருத்துவ மனைக்கு செலவுகள் ஏராளமாக ஆகின்றன என்றும், எனக்கு தகவல்கள் தரப்பட்டுள்ளன. எனவே அவரை அங்கேயிருந்து இங்கே அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் ஏதாவது உண்டா அல்லது அங்கேயே வைத்து மருத்துவம் பார்ப்பதற்கான செலவுகளை அரசு ஏற்றுக் கொள்வதற்கான நிலைமைகள், முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிஞர் கண்ணதாசன் அவர்கள் சிகாகோ மருத்துவமனையிலே சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். நான் அங்கே இருந்தபோது அவரைப் போய் பார்த்தேன். அங்கே இருக்கிற மருத்துவ நிபுணர்கள் நல்ல அக்கறை எடுத்துக் கொண்டு அவரைக் கவனித்து வருகிறார்கள். அந்த ஆஸ்பத்திரி நிர்வாகமும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. இருக்கிற நிலைமைகளை எல்லாம் விவரமாகச் சொல்லி, நாங்கள் அவரைக் காப்பாற்றுவதற்கான எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்கிறோம் என்கிற வாக்குறுதியை தந்திருக்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களுடன் அங்கிருந்து தொடர்பு கொண்டு பேசியபோது, அவருக்கு ஆகிற செலவை தமிழக அரசே ஏற்றுக் கொள்ளும் என்று அறிவிக்கச் சொன்னார்கள். இதையும் நான் அங்கே சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அவர்களிடமிருந்து வேறு எந்த விவரமும் எங்களுக்கு வரவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு மெக்சிகன் நகரில் இருக்கிற, நம்முடைய தமிழ் டாக்டர் ஒருவர் இங்கே வந்திருந்தபோது என்னிடத்தில் தொடர்பு கொண்டார். பணத்திற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் எவ்வளவு என்கிற நிலைமைகளும், அவரைப் பற்றிய கடிதமும் வரவில்லை. நீங்கள் போனவுடனே எவ்வளவு பணம் ஆகும் என்பதைப் பற்றி கடிதம் எழுதுவீர்களானால் அதை வைத்துக்

கொண்டு நாங்கள் ஏற்பாடுகளை செய்கிறோம் என்று நான் சொல்லி அனுப்பியிருக்கிறேன். ஆகவே பணத்தைப் பொறுத்த மட்டில் தமிழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளும், சிகிச்சை நடப்பதற்கான எல்லாவித ஏற்பாடுகளையும் நான் போயிருந்தபோது செய்துவிட்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு எதிர் கட்சி தலைவர் அவர்கள் சென்னதைப் போல சங்கடங்கள் ஏற்படுவதற்கு நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுத்துள்ள முயற்சிகளைப்பற்றி நான் குறை எதுவும் சொல்லவில்லை. அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு காட்டிதான் நான் சொல்கிறேன். ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது என்றும், நான் கேள்விபட்ட வரையில் 50 ஆயிரம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டு, மத்திய அரசினுடைய ஒப்புதல் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். அங்கே இலட்சக்கணக்கில் செலவுகள் ஆகும் என்றும், மருத்துவமனையிலே இதே நிலையில் 'டிஸ்சாரஜ்' ஆனால் கூட லட்சக்கணக்கான ரூபாய் அதற்கு செலவிடப்பட வேண்டுமென்றும்' அவர்களுடைய குடும்பத்தார் மூலமாக எனக்கு தகவல் வந்த காரணத்தால்தான் அதை நான் வைக்கிறேன். ஒரு அரசவைக் கவிஞர் என்கிறமுறையில் அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமை நமக்கு இருக்கிற காரணத்தால் எவ்வளவு செலவானாலும் அந்தப் பொறுப்பை, அங்கே ஆகிற செலவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு அரசு முன் வரவேண்டுமென்று இதைக் கேட்டுக் காட்டினேனே அல்லாமல் வேறு அல்ல.

[முற்பகல் 10.40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அந்த அடிப்படையிலேதான் நாங்கள் ஒதுக்கிய தொகை போதுமானது என்று நினைத்து, ஆரம்பத்திலே கேட்டிருந்தோம். ஆனால் அந்த டாக்டர் வந்து பேசிய பிறகு, ஒதுக்கிய தொகை போதாது என்று தெரிகின்ற காரணத்தால் எவ்வளவு தொகை ஆகும் என்று கடிதம் போடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதை வைத்து, பணத்திற்கு ஏற்பாடு செய்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. ப. குழந்தை வேலு அவர்கள் மீது நான் ஒரு உரிமைப் பிரச்சனை கொடுத்திருக்கிறேன். மவுண்ட் ரோட்டிலே.... (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் நான் சொல்லிவிடுகிறேன். 8.00 மணிக்கு நான் வந்துவிட்டேன். ஆனால் 8.30 மணிக்குத்தான் வாங்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்சனையை எடுத்துக் கொண்டால் நீங்கள் ஒரு நிமிடம் அல்ல 10 நிமிடங்கள் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் நீங்கள் கொடுத்தது